بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 12.12.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# Summary of the Friday Sermon - 12 Dec 2014 (Tamil)

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:-

இன்றும் நான் ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கும் விதத்தில் பல விஷயங்கள் பல கோணத்தில் நம் முன் வருகின்றன. மேலும் அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அந்தர்ஸ்தும், மோன்மையும் மற்றும் அவர்களோடு உள்ள இறைவுதவியின் இன்னோரு கோணமும் நமக்கு தெரிய வருகிறது.

மேலும் சூரா யுனுஸ் ன் வசனம் 17 ல் இறைவன் கூறியுள்ள அதாவது ஃபகது லபிஸ்த்து ஃபீக்கும் உம்ரன் மின் கபலிஹி அஃபலா தாஃகிலூன் , பொருள் : நான் இதற்கு முன்னர் உங்களிடையே ஒரு நீண்ட வாழ்நாளைக் கழித்திருக்கின்றேனே, இதன் பிறகும் நீங்கள் ஏன் உணர்வதில்லை?

கடந்த கால வாழ்கையானது அவரது தற்கால வாழ்கையினை வெளிப்படுத்தும் என்பது நபியின் உண்மைத்துவத்தினை ஆராயும் ஒரு கொள்கை ஆகும். காதியானில் பெரிய பெரிய உலமாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிர்ப்பில் ஒன்று கூடி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக மிகவும் கடுமையான சொற்களால் கடிந்து, சொற்ப்பொழிவுகள் நடத்தி, பெரிய பெரிய திட்டங்களைத் தீட்டி ஒரு கூட்டத்தினை நடத்தினார்கள். மேலும் அதன் மூலமாக குழப்பத்தினை உண்டு பண்ணுவதே அவர்களின் நோக்கமாகவும் இருந்தது. மேலும் அவர்கள் எந்த அளவு கடுமையாக கடிந்து பேச முடியுமோ அந்த அளவு ஏசி பேசினார்கள். எவ்வாறிந்தும் அல்லாஹ் அருள் புரிந்தான். அதன் பிறகு ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்த எதிராளிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்தினை நிருபித்தார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள், அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்திற்கு முன்புள்ள வாழ்கையினை பார்ப்போமேயானால் அன்னார் இந்து மக்களிடமும், சீக்கியர்களிடமும், முஸ்லீம்களிடமும் என்னுடைய முந்தைய வாழ்கையில் உங்களால் ஏதேனும் ஆட்சபணைு செய்ய முடியுமா? என்று அறித்தார்கள். ஆனால் எவருக்கும் அவ்வாறு ஆட்சபணை செய்ய முடிய வில்லை. மாறாக அன்னாரின் பரிசுத்த தன்மையினை எடுத்துரைக்கக் கூடியவர்களாகவும், அதற்கு சாட்சி பகரக் கூடியவர்களாகவும் ஆகிவிட்டார்கள். ஆக ஒரு மனிதர் நாற்பது வருடங்களாக பரிசுத்தமானவராக இருக்கும் நிலையில் எவ்வாறு ஒரு இரவில் அவர் இன்னொரு நிலைக்கு மாறிவிட முடியும் அல்லது அதிலிருந்து நிலைக் குளைந்து விட முடியும். மேலும் மனிதனில் காணப்படும் நேரிகேடுகள் மனிதனில் படிப்படியாகவே தோன்றுகின்றன ஒரேடியாக அவனில் மாற்றம் ஏற்ப்படாது என்று மனதத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள். ஆகவே அன்னாரது கடந்த காலமானது எந்த ஒரு குறையும் இன்றி எவராலும் ஆட்சபணை செய்ய இயலாத அளவு இருந்தது.

பின்னர் இறைவன் சூரத்துல் முஃமினீனில் இவ்வாறு கூறுகின்றான், இன்னா லனன்சுரு ரசுலுனா அதாவது நாம் எமது ரசூலுக்கு உதவி புரிந்தோம். இந்த உதவியானது எந்த அளவு ஹஸ்ரத்

மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்காக வெளிப்படுகிறது என்பதையும் நாம் பார்க்கின்றோம். மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், அன்னாரை கொல்வதற்காக பல வழி முறைகள் கையாளப்பட்டன. மேலும் கொல்வதற்காக ஆள்களும் நியமிக்கப்பட்டனர். மேலும் அன்னார் மீது பொய்யான கொலை வழக்கும் போடப்பட்டன. இவ்வாறு டாக்டர். மார்ட்டின் கிளார்க் ன் பொய்யான கொலை முயற்ச்சி வழக்கு போடப்பட்டது. மேலும் ஒருவர் என்னை மிர்ஸா சாஹிப் தான் கொலை செய்ய நியமித்தார்கள் என்றும் கூறிவிட்டார். மேலும் இந்த மஸீஹ் மஹ்தி என்று வாதம் செய்யும் இவரை இது வரை எவரும் ஏன் பிடிக்க வில்லை? நான் இவரை பிடிப்பேன் என்ற எண்ணத்துடன் நிதிபதியும் வந்தார். ஆனால் வழக்கு நடைபெறும் பொழுது அதே நீதிபதி என் பார்வையில் இந்த மனிதர் நிரபராதி ஆவார் மற்றும் இந்த வழக்கு பொய்யானது ஆகும் என்றும் கூறினார். மேலும் இறைவன் இந்த பொய் வழக்கை அடியோடு அழித்து விட்டான்.

மேலும் இவ்வாறு கூறுகின்றார்கள், நம்முடைய ஜமாஅத்தில் அதிகம் தொண்டாற்றும் உணர்வு கொண்டுள்ள மௌலவி உமருத்தீன் சாஹிப் ஷிம்லவி அவர்களும் கூட அன்னாரினை இவ்வாறே ஆராய்ந்து இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள்.

அவர்கள் அறிவிக்கின்றார்கள், ஷிம்லாவில் மௌலவி முஹம்மது ஹுஸைன் மற்றும் மௌலவி அப்துர்ரஹ்மான் சியாஹ் மேலும் சில நபர்கள் சேர்ந்து மிர்ஸா சாஹிபிற்கு எதிராக என்ன வழிமுறைகள் கையாளப் பட வேண்டும் என்று கலந்து ஆலோசித்தார்கள். மேலும் மௌலவி அப்துர்ரஹ்மான் சாஹிப் மிர்ஸா சாஹிப் அவர்கள் இனிமேல் நான் முபாஹிஸா செய்ய மாட்டேன் என்று அறிவிப்பு செய்துள்ளார்கள் என்று கூறினார்கள். ஆகவே நாம் முபாஹிஸாவிற்கான பிரசுரத்தை வெளியிடுவோம். மேலும் அவர் நாம்முடன் முபாஹிஸா செய்ய வருவாராயின் இவர் முதலில் பொய்யாக முபாஹிஸா செய்யமாட்டேன் என்று பிரசுரம் கொடுத்து விட்டு இப்பொது முபாஹிஸாவிற்கு வருகிறார். மேலும் அவர் முபாஹிஸாவிற்கு வரமாட்டேன் என்றால் மிர்ஸா சாஹிப் தோற்றுவிட்டார் என்று நாம் கூச்சலிடுவோம் என்றார்கள். அப்போது மௌலவி உமருத்தீன் சாஹிப் கூறினார்கள், இதற்கு என்ன அவசியம் இருக்கின்றது நான் சென்று அவரை கொலை செய்துவிடுகிறேன் என்று கூறினார்கள். அதற்கு மௌலவி முஹம்மது ஹுஸைன் இவ்வாறான எல்லா வழிமுறைகளையும் யாம் செய்துவிட்டோம் என்று பதிலளித்தார்கள். அப்போது உமருத்தீன் சாஹிப் எவருக்கு இறைவன் இந்த அளவு பாதுகாப்பு அளிக்கின்றானோ அவர் நிச்சயமாக இறைவனின் புறமிருந்து தான் வந்திருப்பார் என்ற விஷயம் அவர்களின் உள்ளத்தில் ஆழமாக பதிந்து விட்டது. பின்னர் அவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். ஆக எதிரிகள் அன்னாரை கொலை செய்ய முயற்ச்சிக்கின்றனர். ஆனால் இறைவன் அன்னாரை காப்பாற்றுகின்றான். மாறாக எதிர்கின்றவர் நல்லுள்ளம் கொண்டவறாக இருப்பாராயின் அவர் தாமாகவே அதனை ஏற்று தம்மையே விற்றுவிட்டுச் செல்கின்றார்.

தற்போது நான் கூறிய கிறிஸ்துவர்களால் தொடுக்கப்பட்ட கொலை வழக்கினைப்பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் விளக்கமாக எடுத்துரைக்கின்றார்கள். அதாவது மார்ட்டின் கிளார்க் தன்னை கொலை செய்ய மிர்ஸா சாஹிப் ஒருவரை அனுப்பினார் என்று நீதிமன்றத்தில் வாதம் புரிந்தார். மௌலவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் இந்த வழக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு எதிராக சாட்சியளிக்கவும் வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் முன்பாகவே ஒரு மௌலவி உங்களுக்கு எதிராக வருவார் ஆனால் இறைவன் அவனை இழிவு படுத்துவான் என்று அறிவித்தான். மேலும் இறையறிவிப்பில் அவனின் இழிவு பற்றியும் வந்துள்ளது, ஆனாலும் இறையறிவிப்பு நிறைவேறுவதற்கு வெளிப்படையான தகுந்த முயற்ச்சிகளும் செய்வதும் அவசியம் ஆகும். லாஹூரை சார்ந்த மௌலவி ஃபஸல் தீன் சாஹிப் என்ற வக்கீல் அவர்களே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இந்த வழக்கினை எடுத்து நடத்தினார்கள். மேலும் அவர் வழக்கின் போது மௌலவி முஹம்மது ஹுஸைன் சாஹிபிற்கு இழிவு எற்படும் வகையிலான ஒரு கேள்வி கேட்க வேண்டும் எள்று எண்ணினார். ஆனால் அந்த கேள்வி கேட்பதிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அவரை தடுத்தார்கள். மேலும் மௌலவி

ஃபஸல் தீன் சாஹிப் அவர்கள் அஹ்மதி இல்லை. மாறாக ஹனஃபிகளின் லீடராக இருந்தார்கள். ஆகவே மார்க்க ரீதியிலும் அவர் வெறுப்பு கொண்டிருந்தார். ஆனால் எப்போதாவது கைர் அஹ்மதிகளின் கூட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை பற்றி ஏதேனும் தவறாக பேசப் பட்டால் அதனை கடுமையாக கண்டிப்பார்கள். மேலும் கூறுவார்கள், கொள்கையானது தனிப்பட்டது ஆகும். ஆனால் நான் பார்த்தவரையில் நமது மௌலவிகளில் எவரும் கூட நற்பண்புகளில் அவருடன் போட்டு போட முடியாது. மேலும் நற்பண்புகளின் அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உயர் மேன்மை இருந்த இடத்தில் வேறேந்த மௌலவியும் இருந்ததில்லை என்பதை நானும் கூட பல சம்பவங்களில் ஆராய்ந்தது உண்டு. மேலும் இங்கு பார்ப்போமேயானயால் ஒரு பக்கம் சாட்சி இழிவு படுத்தப்படும் என்றுள்ளது. மேலும் மறுபக்கம் அந்த சாட்சியினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குற்றவாளியாகக் கூடும். ஆனால் சாட்சியின் தன்மையினை வீழ்த்தக் கூடிய விஷயம் வரும் போது அதனை கேட்பதிலிருந்து தடுத்து விட்டார்கள். ஆயினும் மௌலவி முஹம்மது ஹுஸைனின் இழிவிற்கான செய்தியினை முன்பாகவே அறிவிக்கும் அந்த இறைவன் மறுபக்கம் தாங்களின் நற்பண்புகளை வெளிப்படுத்தி அந்த அஹ்மதியல்லாத வக்கீலின் பார்வையிலும் தாங்களது அந்தர்ஸ்தை உயர்த்தினான். மேலும் மறுபக்கம் மனித இயல்பிற்கு அப்பார்ப்பட்ட முறையில் மௌலவி சாஹிபையும் இழிவு படுத்திபனான். மேலும் இவ்வாறு மௌலவி சாஹிபிற்கு இழிவு ஏற்பட்டது, அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீது கடுமையாக இருந்த, அன்னாரை பிடிக்க வேண்டும் என்று எண்ணிய அந்த நீதிபதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முகத்தைப் பார்த்த உடனே அவரின் உள்ளம் மாறி விட்டது. மேலும் குற்றவாளியாக நிற்த்தப்பட்ட நிலையிலும் அந்த நீதிபதி அன்னாரை தமது பக்கத்தில் நாற்காலி கொண்டு வர செய்து அமர செய்தார். மௌலவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் சாட்சி செல்ல வரும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கையில் விலங்கு போடப்பட்டிருக்கும் அல்லது அன்னாரை இழிவான முறையில் நிருத்தி வைத்திருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டு வந்தார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நீதிபதி தன்னுடன் நாற்காலியில் அமர வைத்திருப்பதை பார்த்து அவர் கொபமடைந்து, உடனே எனக்கும் நாற்காலி வேண்டும் என்று வேண்டினார். அதற்கு கமிஷ்னர் கொபமடைந்து உலராதே அமைதியாக இரு, பின்னாடி செருப்பு போடப்பட்டிருக்கும் இடத்தில் போய் நில் என்று கூறினார். மேலும் கமிஷ்னர் கூறியதைக் கேட்டு அங்கிருந்த குமாஸ்த முஹம்மது ஹுஸைன் சாஹிபின் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்து செருப்பு போடப்பட்டிருக்கும் இடத்தில் கொண்டு நிருத்தினார். மௌலவி சாஹிப் தனக்கு இழிவு ஏற்பட்டு விட்டது இது வெளியே நின்றுக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு என்னுடைய இழிவைப்பற்றி தெறிய வந்தால் என்ன கூறுவார்கள் என்று எண்ணி நிதிமன்றத்தை விட்டு வெளியே சென்று விட்டார். அங்கு வரான்டாவில் இருந்த நாற்காலியை எடுத்து தன்னுடைய இழிவை மூடி மறைப்பதற்கான வாய்ப்பு இது இவ்வாறு நாற்காலியில் அமர்ந்து இருப்பதை மக்கள் காண்டால் எனக்கு உள்ளேயும் நாற்காலி கிடைத்தது என்று எண்ணுவார்கள் என்று அதில் அமர்ந்து விட்டார். குமாஸ்த மௌலவி சாஹிப் அமர்ந்திருப்பதை கண்டு அவரை அங்கிருந்தும் விரட்டி இடத்தை காலி செய் என்று கூறினார். இவ்வாறு வராண்டாவில் இருந்த நாற்காலியும் போய் விட்டது. மேலும் வெளியே விரிப்பை விரித்து தீர்ப்புக்காக காத்திருக்கும் மக்கள் இருந்தார்கள். ஒரு விரிப்பில் கொஞ்சம் இடத்தை கண்டதும் அங்கு சென்று அமர்ந்து விட்டார். மேலும் அந்த விரிப்பு மியா(ன்) முஹம்மத் பக்ஸ் சாஹிபுடையதாகும். மேலும் அவர் அப்போது அஹ்மதியாகும் இல்லை. மௌலவி முஹம்மது ஹுஸைன் சாஹிபை தனது விரிப்பில் அமர்ந்திருப்பதை கண்டு கொபம் அடைந்து, நீ என்னுடைய விரிப்பை விடு. நீ என்னுடைய விரிப்பை அசுத்தப்படுத்தி விட்டாய். நீ முஸ்லீமாக இருந்துக் கொண்டு கிறிஸ்த்துவர்களுக்கு ஆதாயமாக சாட்சி செல்ல வந்திருக்கின்றாய் என்று கூறினார். ஆக அந்த விரிப்பிலிருந்தும் அவருக்கு எழுந்து நிற்க்க வேண்டியதாகி விட்டது. இவ்வாறு அல்லாஹ் எல்லா இடத்திலிருந்தும் அவரை இழிவு படுத்தினான்.

எவ்வாறு இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிரியின் கையாலேயே அன்னாருக்கு விடுதலை அளித்தான் என்பது தான் தெளிவான இறைஅடையாளங்கள் ஆகும் என்பதை பாருங்கள். பின்னர் இத்தொடு நிறுத்தி விடவில்லை மாறாக சர் டக்லஸ்ஸிற்கு மரணம் வரையிலும் நினைவிருக்கக் கூடிய இறைஅடையாங்களை இறைவன் அவருக்கு காட்டினான். சர் டக்லஸின் ஹட் கிளார்க் ஆகிய குலாம் ஹைதர் அவர்கள் இந்த சம்பவத்தை கூறுகின்றார்கள் அதாவது சர் டக்லஸ் கவலை கொண்டவாறு வராண்டாவில் இங்கேயும் அங்கேயும் நடந்துக் கொண்டிருந்தார். அப்போது நான் அவரின் அருகில் சென்றேன். உடனே அவர் எப்போதிலிருந்து நான் மிர்ஸா சாஹிபின் முகத்தை கண்டேனோ அப்போதிலிருந்து எனக்கு ஒரு வானவர் மிர்ஸா சாஹிபின் பக்கம் நீட்டிக் காட்டியவாறு அவர் மீது எந்த தவறும் இல்லை அவர் குற்றமற்றவர் என்று கூறுகின்றார். பின்னர் நான் வழக்கினை முடித்து விட்டு இங்கு வந்து சிறிது உலாவிக் கொண்டிருந்தால் அவரது முகம் என் முன்பாக வந்து நான் இந்த காரியத்தை செய்ய வில்லை. மேலும் இவ்வனைத்துமே பொய்யாகும் என்று செல்கிறது. மேலும் அவ்வாறு மறுபக்கம் சென்றாலும் அவரது முகம் வந்து நான் இதை செய்ய வில்லை என்று கூறுகிறது. ஆக இவ்வாறே போய்க் கொண்டிருந்தால் பைத்தியமாகி விடுவேன் என்று கூறினார். அதற்கு நான் சாஹிப் சுப்பிர்டேன்டன் போலிஸும் வந்துள்ளார் அவரும் ஆங்கிலேயரே ஆவார். மேலும் இதை பற்றி அவரிடம் கேட்பதனால் தாங்களுக்கு இந்த பிரச்சனையில் இருந்து விடு பட வழி கிடைக்கும் என்றேன். அவர் வந்த போது இவ்வனைத்தையும் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.சுப்பிர்டேன்டன் போலிஸ் கூறினார், நீங்கள் சாட்சியினை பாதிரிகளின் வசத்தில் வைத்துள்ளீர்கள். மேலும் அவர்கள் எதை கற்பிக்கின்றார்களே அதை அவன் நீதிமன்றத்தில் வந்து சொல்கின்றான். ஆனால் அவனை போலிஸ் வசத்தில் விட்டு விடுவீர்கள் என்றால் பின்னர் அவன் கொடுக்கும் வாக்குமுலத்தைக் கண்டு நீங்களே வியந்து விடுவீர்கள். ஆகவே அப்போதே சர் டக்ளஸ் அப்துல் ஹமீதை போலிஸின் கஸ்டடியில் வைக்க உத்தரவு இட்டார். உத்தரவின் படி அப்துல் ஹமீது பாதிரிகளிடம் இருந்து போலிஸின் கஸ்டடியில் கொண்டு வரப்பட்டான். அடுத்த நாள் அல்லது அதே நாள் நான் பொய் கூறுகின்றேன் என்று ஒப்புக் கொண்டான். ஆக இவ்வாறு அவன் எல்லா உண்மையினையும் சொல்லி விட்டான். அடுத்த வாயிதாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சர் டக்ளஸ் நிரபராதி என்று விடுதலை செய்து விட்டார்.

பாருங்கள்! இவ்வனைத்துமே நமக்காக இறைவன் வெளிப்படுத்திய தெள்ளத் தெளிவான இறையடையாளங்கள் ஆகும். மேலும் இதிலிருந்து சர் டக்ளஸுக்கும் இறைவன் இன்னும் பல இறையடையாளங்களை வெளிப்படுத்தினான். ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சர் டக்ளஸ் அறிவித்தாக ஒரு சம்பவத்தை கூறுகின்றார்கள், அதாவது ஒரு இன்டியன் ஐ சி எஸ் அதிகார் ஒருவர் என்னிடம் வந்து உங்களது வாழ்கையில் ஏற்பட்ட வினோதமான ஏதாவதோரு சம்பவத்தை கூறுங்கள் என்று அவர் கேட்டார். அதற்கு மிர்ஸா சாஹிபின் இந்த சம்பவத்தையே அவருக்கு எடுத்துக் கூறினேன். அப்போது எனது பாதுகாவலர் வந்து வெளியே ஒருவர் வந்துள்ளார் அவர் தாங்களை சந்திக்க வேண்டும் என்கிறார் என்று அவன் என்னிடம் சொன்னான். அவன் உள்ளே வந்து உங்களுக்கு எனது தகப்பனாரைப் பற்றி தெறியும். அவர் பெயர் பாதிரி வாரிஸ் தீன் ஆகும். அதற்கு நான் அவரைப்பற்றி தான் இங்கு கூறிக்கொண்டிருந்தேன். உடனே அவன் அவர் இறந்து விட்டார் என்று தார் வந்துள்ளது என்று சொன்னான். வாரிஸ் தீன் என்பவர் டாக்டர். மார்டின் கிளர்க்கை மகிழ்விக்க வேண்டி இவ்வனைத்து திட்டங்களையும் தீட்டியவர் ஆவார். மேலும் வாரிஸ் தீனைப்பற்றி கூறும் அதே வேளையில் அவரது மகன் வந்து என்னுடைய தகப்பனார் இறந்து விட்டார் என்று கூறுவது ஒரு வினோதமான விஷயம் ஆகும். மேலும் சர் டக்ளஸ் தனது மரணம் வரை எந்த அஹ்மதிகளை எல்லாம் சந்தித்தாரோ அவர்களிடம் இந்த சம்பவத்தைப் பற்றி கூறாமல் இருக்க மாட்டார்கள். இதுவே தெள்ளத் தெளிவான இறையடையாங்கள் ஆகும். இதன் மூலமாகவே இறைவன் தனது நபிமார்களின் உண்மைத் துவத்தினை உலகில் வெளிப்படுத்துகின்றான். மேலும் நம்பிக்கைக் கொண்டவர்கள் இதன் ஆழத்தை புரிந்தவாறு உண்மையான இறை நம்பிக்கையாளராக மாற முயற்ச்சிக்க வேண்டும். மேலும்

அவர் உண்மையான இறை நம்பிக்கையாளராக மாறி விட்டார் என்றால் நிச்சயமாக இறைவன் அவரின் ஈமானை வலுப்படுத்தும் வகையிலான மறைவானவற்றை அவருக்காக செய்கின்றான். உண்மையில் இவ்வாறான ஈமான் இல்லாமல் எந்தவொரு பலனும் இல்லை. மேலும் எந்த ஈமான் மனிதனின் பார்வையை திறக்காமல் இருக்குமோ அந்த ஈமானைக் கொண்டு அவனுக்கு என்ன பலன் இருக்கும். மேலும் எவர் இந்த உலகில் குருடராக இருப்பாரோ அவர் மறு உலகிலும் குருடராகவே இருப்பார். மேலும் எவருக்கு இந்த உலகில் ஆயாதே பய்யுனாத் (தெளிவான இறையடையாளம்) தென்படாதோ அவருக்கு மறு உலகிலும் ஆயாதே பய்யுனாத் தென்படாது. மேலும் இறையடையாளங்களை பார்ப்போமேயானால் இவைகளின் தொடர்ச்சி இன்றும் தொடர்ந்துக் கொண்டிருக்கின்றது. இது ஒரு பெரிய இறை அடையாளம் என்று நூறு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. மேலும் இது இன்றும் கேப்டன் டக்ளஸின் மகள் வழி பேரன் எனக்கு அனுப்பியுள்ள செய்தியின் வாயிலாக அதாவது, நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன். மேலும் எனது தாத்தா என்ன நல்ல காரியம் செய்துள்ளார் என்று எனக்கு தெரிய வில்லை, ஆனால் எனது உள்ளத்தில் அதிகமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தினை ஏற்றுக் கொள்ளவதற்கான ஆர்வம் பிறந்துள்ளது. மேலும் இந்த இறையடையாளத்தின் உணர்வு இன்றும் கூட அவருக்கு பிறந்துள்ளது என்பதே அடையாளம் ஆகும். இன்று அவரின் பேரனுக்கு சர் டக்ளஸிற்கு காட்டப்பட்ட உண்மையினை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அதன் உண்மைத்துவத்தினை பார்த்து அவரின் பேரன் நான் இதை ஏற்றுக் கொள்கிறேன் என்ற உணர்வுடன் இருக்கின்றார். மேலும் மார்டின் கிளார்க்கின் பேரனுடைய கூற்றை நீங்கள் கேட்டிருப்பீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். இதற்கு முன்னரும் கூட தெளிவாக அவரின் கொள்ளுப் பேரன் எனது தாத்தா தவற்றில் இருந்தார் மேலும் மிர்ஸா சாஹிப் உண்மையாளர் ஆவார் என்று அறிவித்தார் என்று கூறியிருந்தேன்.

ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், அதாவது முஃமின்களுக்கு அல்லாஹ் இஸ்லாம் மற்றும் தன்னுடைய இருப்பிற்கான அடையாளத்தை அவருக்காக வெளிப்படுத்தும் அந்நாள் வருவதற்காகவும் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளிமையமான முகம் தெறிவதற்காகவும், அல்லாஹ்வின் ஒளிமையமான முகம் தெறிவதற்காகவும் எந்நேரமும் துஆ மற்றும் இறை தியானத்தில் மூழ்கியிருத்தல் வேண்டும். மேலும் இவ்வாறு ஆகும் போது இரவும், பகலும் கஷ்ட காலமும், மகிழ்ச்சிகான காலமும் அவருக்காக ஒன்றாகி விடுகின்றன. ஆக ஒரே ஒரு உணர்வு தான் எஞ்சியிருக்கும். மேலும் அந்த இறையன்பிலேயே மனிதன் மூழ்கியிருப்பான். எவ்வாறிருப்பினும் இவ்வாறானவர்கள் எந்நேரமும் மகிழ்ச்சியுடன் மற்றும் மன நிம்மதியுடன் யாருக்கும் அஞ்சாமல் இருப்பார்கள். இவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கரம் தீன் பேரே வாலா வழக்கு தொடுக்கும் போது அவ்வழக்கை விசாரிப்பதற்கு ஒரு இந்து நீதிபதி நியமிக்கப்பட்டார். ஆரியர்கள் அவரை உசுப்பேற்றி இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கண்டிப்பாக தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள். அவரும் அதற்காக வாக்கும் கொடுத்தார். இதனை அறிந்ததும் காஜா கமாலுத்தீன் சாஹிப் பயந்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காஜா கமாலுத்தீன் சாஹிப்பிடம் காஜா சாஹிப்! தாங்கள் ஏன் கவலைக் குள்ளாகின்றீர்கள். இறைவனது சிங்கத்தின் மேல் கை வைக்க யாராலும் முடியுமா என்ன? என்று கூறினார்கள். மேலும் அவர் நீதிபதியாக இருந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அவ்விருவர்களுக்கும் மிக கடுமையான தண்டனை கிடைத்தது. மேலும் ஆரியர்கள் தங்களின் நோக்கத்தில் தோல்வியுற்றனர். ஆகவே மனிதன் இறைவனுக்காக ஆகி விடுவான் என்றால் உலகின் எல்லாமே அவனுக்காக ஆகி விடுகின்றன. இது எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஜே து மேரா ஹோ சப் ஜக் தேரா ஹோ என்ற இறையறிவிப்பை ஒத்ததாகும். ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்காக ஆகுங்கள். மேலும் அல்லாஹ்வுக்காக ஆக வேண்டும் என்று துஆ செய்து கொண்டிருங்கள். இவ்வாறு நீங்களும் நிம்மதியின் கீழ் வந்து விடுவீர்கள். உங்களுடைய மற்ற நண்பர்களும், உற்றார் உறவினர்களும் நிம்மதியின் கீழ் வந்து விடுவார்கள்.

பின்னர் ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், பாதிரி மார்ட்டின் கிளார்க் அன்னார் மீது வழக்கு தொடுக்கும் போது நான் பயந்து போய் துஆ செய்தேன். அதே இரவில் போலிஸ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நிற்க்க வைத்துள்ளார்கள். மேலும் அன்னாரின் முன்னரும் பின்னரும் கட்டைகளை அடுக்கி வைத்துள்ளார்கள். இதனால் எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தலைப் பகுதி மட்டுமே தெறிகிறது. மேலும் காவலர்கள் அதில் மண்ணெண்னையை ஊற்றி அதை கொளுத்துவதற்காக முயற்ச்சி செய்கின்றார். நான் முன்பு அடியடுத்து அந்த தீயினை அனைக்க முயற்ச்சி செய்தேன். அப்போது என்னை நான்கு காவலர்கள் பிடித்து விட்டார்கள். மேலும் அவர்கள் தீயினை மூட்டி விடுவார்களோ என்று நான் மிகவும் அஞ்சினேன். அதே வேளையில் என்னுடைய பார்வை மேலே எழும்பியதும் நான் அதில் தடித்த மிகவும் அழகிய வார்த்தைகளில் இறைவனது அன்பிற்குறிய அடியார்களை யாரால் எறிக்க முடியும் என்று எழுதியிருப்பதை பார்தேன். மேலும் கூறுகின்றார்கள், முஃமின்களுக்கு மறு உலகில் மட்டுமல்ல மாறாக இவ்வுலகிலும் சாந்தி கிடைக்கின்றது.

கேப்டன் டக்ளஸ் சாஹிப் ஐ சி எஸ் அதிகாரி கூறிய சம்பவத்தில் இன்னும் ஒரு விஷயத்தையும் கூறினார், அதாவது மிர்ஸா சாஹிபை போன்று உயர் மனதைரியம் கொண்ட எவரையும் நான் பார்க்க வில்லை. அவர் மீது மிகவும் பயங்கரமான குற்றம் சுமத்தி அன்னாரை கஷ்டத்தில் ஆழ்த்திய அவர்கள் மீது நீங்கள் உங்களை இழிவு படுத்தியமைக்காக வழக்கு தொடுங்கள் என்று நீதிமன்றத்தில் கூறப்பட்ட போது அவர்கள் இவ்வாறு வழக்கு தொடுக்க எனக்கு விருப்பம் இல்லை என்று கூறினார். இதுவே அன்னாரது மிகுந்த மனதைரியம் ஆகும். மேலும் இவ்வனைத்து எதிர்ப்புகளுக்கு இடையிலும் அல்லாஹ் தனது வாக்குறுதிகேற்ப அன்னார் மட்டும் பாதுகாப்பாக இருக்க வில்லை மாறாக அன்னாரது ஜமாஅத்தும் வளர்ந்து கொண்டிருந்தது. காதியானும் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இந்த முன்னேற்றத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், ஒரு காலத்தில் இங்கு அஹ்மதிகளை பள்ளிக்கு செல்ல விடமாட்டார்கள். மேலும் நான்கு முக்கு பாதையில் தொழப் பேகக் கூடியவர்கள் விழ வேண்டும் என்று தடுப்புகளை நட்டி வைப்பார்கள். மேலும் கிணற்றிலிருந்து தண்ணீர் இரைக்க தடை வித்தார்கள். அதை விட மேலாக பாத்திரம் செய்பவர்களிடமும் நீங்கள் அஹ்மதிகளுக்கு பாத்திரங்கள் கொடுக்கக் கூடாது என்று தடை விதித்திருந்தார்கள். அந்த காலத்தில் இவ்வனைத்து கஷ்டங்களும் இருந்தன. ஆனால் அவர்கள் எங்கே போய்விட்டார்கள். அவர்களின் சந்ததிகள் அஹ்மதிகளாகி விட்டது. மேலும் எவர்கள் அஹ்மதிய்யத்தினை அழிக்க வேண்டும் என்று எண்ணினார்களே அவர்களின் சந்ததிகள் இப்போது இதனை பரப்புவதில் மும்முரமாக உள்ளது. ஆக இதுவும் இறைவனின் ஒரு சிறப்பான உதவியின் அடையாளம் ஆகும். மேலும் இறைவன் ஜமாஅத்தினை உலகில் எங்கேங்கேல்லாம் பரப்பியுள்ளான். ஆகவே இவ்வனைத்து செயல்பாடுகளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கான அடையாளம் ஆகும். மேலும் தாங்களுக்கு பிறகு தொடரும் கிலாஃபத்துடனான இறையுதவியின் அடையாளமும் ஆகும். மேலும் இவை அனைத்தும் நமது ஈமானை வலுப்படுத்தக் கூடியவைகளாகும். மேலும் இறைவன் இவ்வனைத்தையையும் நாம் நம்முன் எந்நேரமும் வைக்கக் கூடியவர்களாக மற்றும் இது நம் சந்ததிகளின் ஈமானை எந்நேரமும் வலுப்படுத்தக் கூடியதாக அமைய செய்வானாக!. ஆமீன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 12.12.14
Summarized by Nazarath Nashr-O-Isha’ath
Tamil Translation : Moulavi. Abdul Muneef
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516